# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.11.20 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

# இலங்கை விவசாய நிறுவனம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**இலங்கை விவசாய நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம அவர்களால் பாராளுமள்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 72.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## இலங்கை விவசாய நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

முன்னுரை

"இலங்கை விவசாய நிறுவனம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க அதனது குறிக்கோள்களையும் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்பு பட்ட எல்லா கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதுகாலவரை இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனம் எப்பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், கூட்டிணைக்கப்படு வதற்காக விண்ணப்பித்துள்ளதாதலாலும், அச்சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக் கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படு வதாகுக:-

சுருக்கப்பெயர்

**1.** இச்சட்டம் 2025ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை விவசாய நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இலங்கை விவசாய நிறுவனத்தைக் கூட்டிணைத்தல்

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிறுவனம்" என குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை விவசாய நிறுவனத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டிணைக்கப் பட்ட குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை விவசாய நிறுவனம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டுமென்பதுடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை

PL 15496 - 120 (2025/10)

யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்மைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலுக்கும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டம், இச்சட்டம் மற்றும் 7ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளின் ஏற்பாடுகளுக்மைய கூட்டிணைக்கப்பட்ட குழு அமைதக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது:-

(அ) விவசாயத்துறை தொழில்வல்லுநர்களைப் பதிவு செய்தலும் அவர்களது தொழில்சார் நடத்தைகளை நெறிப்படுத்தலும்;

(ஆ) விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கு வேண்டிய விவசாயத்துறை தொழில்சார் விடயங்களில் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தல்;

(இ) (i) இலங்கையில் விவசாயத்துறைசார் விஞ்ஞானத்தை மேம்படுத்துவதற்கும் அவற்றை பிரயோகிப்பதன் மூலமும்,

(ii) தேசிய மட்டத்தில் விவசாயத்துறைசார் கல்விக்கு உதவி செய்வதன் மூலமும், மற்றும்

(iii) தேசிய மட்டத்தில் விவசாயத்துறையில் ஆராய்ச்சிகளுக்கு உதவுதற்கும், ஊக்குவிப்பதற்கும் மற்றும் வளர்ப்பதற்கும்,

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர்களது வேண்டுதலில் பேரில் உதவி செய்தல்;

(ஈ) விவசாயத்துறை தொடர்பான விஞ்ஞான ரீதியான தொழிற்பாடுகளை சமர்ப்பித்து அதில் கலந்துரையாடல் செய்வதற்கான மன்ற மொன்றினை ஏற்படுத்தி விவசாயத்துறை அறிவியலை ஒன்றுதிரட்ட, அதனை பரப்ப மற்றும் பரிமாறல் செய்ய ஊக்குவிப்புச் செய்தல்;

(உ) நிறுவனத்தின் அங்கத்துவ தேர்ச்சிக்காக பரீட்சைகளை நடாத்துதல், விவசாய தொழில் துறையில் சம்பந்தப்பட்டவர்களின் தகுதிகளை பரீட்சித்தல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்;

(ஊ) தொழில்நிபுணத்துவத்தின் உயர் தரத்தை மற்றும் நிறுவனத்தின் உறுப்பினர்களது பொதுவான நடத்தைகளை பேணிப்பாதுகாப்பதனை உறுதி செய்தல்;

(எ) விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு இலங்கை பிரசைகளின் பங்களிப்புக்கள் மற்றும் அவர்களது விசேட திறமைகளை அடையாளம் கண்டுகொள்ளல்;

(ஏ) இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்வல்லுநர் நிறுவனங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளல்;

(ஐ) விவசாயத்துறை தொழில்நிபுணத்துவத்தின் பிணக்குகளின்போது தீர்வு முறைமையினை பொருத்தமான முறையில் ஊக்குவித்தல்;

(ஒ) விவசாயத்துறை தொழில்நிபுணத்துவம் தொடர்பிலான விடயங்களில் தனியார்துறை மற்றும் அரசதுறைகளின் ஒத்துழைப்புடன் செயற்படல்:

(ஓ) நிறுவனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்த இலங்கையிலும் மற்றும் ஏனைய நாடுகளிலும் உள்ள ஒத்த தொழில்நிபுணத்துவ அமைப்புக் களுடன் ஒருங்கிணைதலை ஊக்குவித்தல்;

(ஔ) உறுப்பினர்கள் நன்மை கருதி தொடர்ச்சியான தொழில்நிபுணத்துவக் கல்வியை ஏற்பாடு செய்தல், கொண்டுநடாத்துதல், மேற்பார்வை செய்தல். ஒழுங்குபடுத்தல் மற்றும் தேர்ச்சி சான்றிதழ்களை வழங்குதல்;

(க) இலங்கையில் விவசாயத்துறைசார் அனைத்திலும் விஞ்ஞான மற்றும் நடைமுறைகளை ஊக்குவித்து முன்னேற்றுதல்;

(ங) நேரடியாக அல்லது மறைமுகமாக விவசாயத் தோடு தாக்கம் செலுத்துகின்ற விவகாரங்களில் பொதுமக்கள் பொதுத்துறையினருக்கும் மற்றும் ஏனையோருக்கும் விவசாயத்துறை தொழில் நிபுணர்களின் கருத்துக்களை பரிமாரிக்கொள்ளத் தக்க வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல்; மற்றும்

(ச) மேற்படி குறிக்கோள்களை அல்லது அதில் எதனையும் எய்துவதற்கு அவசியமானவையும் இடைநேர்விளைவானவையும் அல்லது அதன் அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் குறிக்கோள் களின் அமுலாக்கலில், கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அத்தகைய அமுலாக்கலானது இனம், மதம், சாதி, பால், அரசியற்கொள்கை பிறப்பிடம் அல்லது அத்தகைய ஏதுக்கள் ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் அமைச்சினது அல்லது திணைக் களத்தினது அல்லது உள்ளூரதிகார சபை அல்லது பகிரங்க கூட்டுத் தாபனத்தின் பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டிணைக்கப் பட்ட குழு உறுதிப்படுத்தல்

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான சட்டத்திற்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் அல்லது உள்ளூரதிகார சபையினால் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண் பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்

**5.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டம். இச்சட்டம் மற்றும் 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதிகளின் ஏற்பாடுகளுக் கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் நிருவகித்தலும், 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் குறித்துரைக்கப்படக்கூடிய வரானதும்அதில்குறித்துரைக்கப்படக்கூடியவரானஅத்தகைய முறையொன்றிலும் அத்தகைய எண்ணிக்கையினரான பதவி தாங்குனர்களைக் கொண்டமைந்த (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) நிர்வாக சபை யினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற இலங்கை விவசாய நிறுவனத்தின் நிர்வாக சபையின் உறுப்பினர்கள் (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது சபை (ஈ) எனும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள்ளும் 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் நியமிக்கப்படும் வரை அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால சபையொன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்;

(ஆ) ஏழாம் பிரிவின் (2), (3), (4) மற்றும் 5ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக் கால குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிர்வாகத்திற்கென இச்சட்டத்தின்,வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குவதற்கு தத்துவம் கொண்டதாதல் வேண்டும்;

(இ) இடைக்கால சபையின் ஏதேனும் முடிவு ஏதேனும் கூட்டங்களில் சமூகமாகவுள்ள அதனது உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் எடுக்கப்படுதல் வேண்டும். இடைக் காலச் சபையின் கூட்ட நடப்பெண் பதினொன்றாக (11) இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது அதன் தவிசாளர் அல்லது பொது செயலாளரைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) கூட்டினைக்கப்பட்ட குழுவின் முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்;

(3) (அ) போஷகர்களும் மதியுரைநர்களும் உட்பட, சபையின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் மூன்றாண்டு காலப் பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக் கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைநர், சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீள நியமிக் கப்படுவதற்கு அல்லது மீள தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமையுடையவராதலும் வேண்டும்;

(ஆ) பதவிதாங்குனரொருவரின் இறப்பு, பதவி விலகல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்; மற்றும்

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுக்கின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாது எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுத் தத்துவங்கள்

**6.** வேறேதேனும் எழுத்திலான சட்டம், இச்சட்டம் மற்றும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதிகளின் ஏற்பாடுகளுக் கமைய கூட்டணிக்கப்பட்ட குழுவானது, கூட்டினைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு பின்வரும் செயல்களையும் கருமங்களையும் செய்யவும் புரியவும் நிறைவேற்றவும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்;

(அ) கூட்டினைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக் காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறு வகையாக பெறுதலும் அத்துடன் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக அவற்றை கையாளு தலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) கூட்டினைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள் களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களை பிரயோகிப்பதற்காக அவசியமாக இருக்கக் கூடியவரான அத்தகைய எல்லா ஒப்பந்தங் களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ செய்து கொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும்;

(இ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி நிதிகளை கடனாக பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளையும், கொடை களையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும்:

ஆயின் சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவுக்கு அளிக்கப்பட்ட மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் உட்பட எல்லா வெளிநாட்டு நிதிகள் தொடர்பிலும், வெளிநாட்டு மூல வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தை பெறுதல் வேண்டும்;

(ஈ) பந்தி (இ) இன் ஏற்பாடுகளுக்கமைய, மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதி பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தக்க சாதனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக் கொள்ளுதலும், கழிப்பளவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளை திறத்தலும், தொழில்படுத்துதலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக் காக உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒத்த குறிக்கோள்களை கொண்ட ஏதேனும் சட்ட முறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தை பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிர்வகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர் களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவி நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத் துதலும், அவர்கள் மீது ஒழுங்காற்று கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் இச்சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் நியதிகளின் படி கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும் அவர்களுக்கு செலுத்துதலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள நபர்களுக்காக விரிவுரைகளையும் கருத்தரங்குகளையும் பயிற்சி களையும் மாநாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்; மற்றும்

(ஒ) கூட்டினைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எழுதுவதற்கென இச்சட்டத்தினால் அதிகாரமளிக் கப்பட்டவாராக அத்தகைய காரியங்களையும் செய்தலும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு குறையா தோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்களுக்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு

ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்கு காலம் ஆக்குதல் வேண்டும். கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கூட்ட நடப்பெண் தொழில் சார் உறுப்பினர்களின் (தொழில்சார் உறுப்பினர்கள் மற்றும் கூட்டுறுப்பினர்கள்) மூன்றில் ஒருபங்கு அல்லது ஐம்பது (50) பேர்களில் எது குறைவான எண்ணிக்கையோ அதுவாக இருக்க வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களை சேர்த்தலும், அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவிநீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலன வான கட்டணங்களும்;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அத்துடன் பதவி தாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது பதவியில் இருந்து அகற்றப்படுதல் மற்றும் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனத் திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும், சேவையிலிருந்து பதவி நீங்குதலும் சேவை முடிவுறுத்துதலும் ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டை பிரயோகித்தலும், சம்பளங்கள் மற்றும் படிகளின் கொடுப்பனவும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது சபை யினது கூட்டங்களை கூட்டுதலிலும் நடத்து தலிலும் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை முறையும் மற்றும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களை வழங்குதலும், அவற்றின் நிகழ்ச்சிநிரலும், அவற்றிற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடத்துதலும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது சபை யினது உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிர்வகித்தலும் முகாமை செய்தலும்;

(எ) கூட்டமைக்கப்பட்ட குழுவின் ஒத்த குறிக் கோள்களை கொண்ட வேறு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல், ஒத்துழைத்தல் மற்றும் ஒப்பந்தம் செய்தல் முறையை ஆளுவதற்கான நடவடிக்கை முறை; அத்துடன்

(ஏ) பொதுவாக கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் கூட்டிணைக் கப்பட்ட குழுவை கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் விதி ஒன்று ஆக்கப்பட்டதைப் போன்ற அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம். மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது சட்டத்தின் (5) ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதிகள் அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதன் மேல், ஒரு மாதத்திற்குள் வருத்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் அத்துடன் அதன் வெளியீட்டு திகதியில் வலுவிற்கு வருதல் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதனது வெளியீட்டிலிருந்து இரண்டு மாதங்களினுள் அங்கீகாரத்துக்கென பாராளு மன்றம் முன் கொண்டு வரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அதன் கீழ் முறையாக செய்யப்பட்டவற்றுக்கு பங்கமின்றி, அத்தகைய அங்கீகார மறுப்புத் திகதியிலிருந்து இரத்தச் செய்யப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(5) எத்திகதியில் (4) ஆம் பிரிவின் கீழ் அவ்வாறு இரத்து செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றதோ அத்திகதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதி களுக்கமைந்தோராதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு

**8.** சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றை பேணுதல் வேண்டும். இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்

**9.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆறாம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் காப்புவாசகத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக்கொடை, நன்கொடை, ஒப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங் களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப் படுகின்றவாறான அத்தகைய எல்லா பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் எற்பாடு களினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின்

கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக் கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ள வரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றித ழொன்றைக் கொண்டவராகவும் அக்கணக்காளர் குழுமம் ஒன்று.

எனப் பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**11.** (1) சபை ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக் கப்பட்ட குழுவின் செயல்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றை தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிக்கையை கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது 10ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் கூற்று, சான்றுறுதிப்படுத்தப்பட்ட கூட்டிணைக் கப்பட்ட குழுவின் எல்லா சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் நிரலொன்று மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செய்து கொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும்

உடன்படிக்கைகளும் பற்றிய விவரங்கள் மற்றும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுடன் சேர்த்து என்னும் விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வழிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைபப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வழிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின் போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாக தனிவேறான கணக்கொன்று 1 ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

நிறுவனத்தினால் செலுத்த வேண்டியவையும் நிறுவனத்திற்கு செலுத்தப்படற்பாலனையுமா தனிசுகள்

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று உள்ளதாயிருக்கும் இலங்கை விவசாய நிறுவனத்தின் எல்லா தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று இலங்கை விவசாய நிறுவனத்திற்கு வருமதியாகவுள்ள எல்லா தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பணங்களும், உதவுத் தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**13.** வேறேதேனும் எழுத்திலான சட்டம், இச்சட்டம் மற்றும் 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதிகளின் ஏற்பாடுகளுக் கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவனக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாக வரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும்,

7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடு வைக்க குத்தகைக்கு கொடுக்க. கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடனும் கூட்டிணைக் கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்

**14.** வேறேதேனும் எழுத்திலான சட்டம், இச்சட்டம் மற்றும் 7ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதிகளின் ஏற்பாடுகளுக் கமைய, எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகை ஊதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலட்சினை

**15.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடு களுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலட்சினை, சபையின் இரு உறுப்பினர்களது முன்னிலையில் அன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடு வதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, சபை யினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான சபையின் பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

கலைப்பின் போது எஞ்சி யுள்ள ஆதனம்

**16.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும்

வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளைப் பேணுதல்

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப் படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

பொருள் கோடல்

**18.** சட்டம் வேறு வகையாக தேவைப்படுத்தினால் அன்றி,

"வங்கி" என்பது 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம் பெற்ற வங்கியொன்று என பொருள் கொள்ளப்படும்;

"எழுத்திலான சட்டம்" என்பது அரசியலமைப்பில் உள்ள அத்தகைய சொல்லமைப்பின் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளினை கொண்டுள்ளது;

"அறிவியலை பரிமாறல் செய்தல்" என்பது கலாச் சாரத்தினூடாக தொடர்ந்துவரும் கல்வி மற்றும் பரஸ்பர தொடர்புகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் சிந்தனைகள், திறமைகள் மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றை பரிமாற்றிக் கொள்ளவதற்காக வசதிகள் செய்யப்படும அனைத்து செயற்பாடுகள் எனப் பொருள் கொள்ளப்படும்;

"விவசாயத்துறை தொழில்வல்லுநர்" என்பது "விவசாயம்" அல்லது "விவசாயத்துறை சார்ந்த விடயங்கள்" தொடர்பான கல்வித்தகமை கொண்ட தொழில்நுட்ப தகைமையுள்ள விவசாயத்துறைசார்

சேவை அனுபவமுள்ள மற்றும் “விவசாயம்” அல்லது “விவசாயத்துறை சார்ந்த விடயங்களை” தொழில் ரீதியாக செயற்படுத்துபவர் எனப் பொருள் கொள்ளப்படும் ;மற்றும்

“தொழில்சார் நடத்தைகள்” என்பது ஒருவரது தொழில் ரீதியான வாழ்வின்போது நேர்மை, கடமை மற்றும் பொறுப்புக் கூறுவதை எடுத்துக் காட்டுவது, தொழில் ரீதியான முன்னேற்றம் அல்லது தொழில் வெற்றிக்காக பொருத்தமற்ற அல்லது ஒழுக்கமற்ற முறைமைகளை பிரயோகிப்பதனையிட்டும் தவிர்ந்துகொள்ளல் மற்றும் ஏனைய விவசாய தொழில்வல்லுநர்களுடன் சாதாரண மான, தெளிவான மற்றும் நியாயமான போட்டி யொன்றின் மூலம் இலக்கை நோக்கி நகர்தல் என பொருள் கொள்ளப்படும்.

**ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்**

**19.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.